Registered No. M. 2830 "SIDDHANTHAM"
Vol. 42 — No. 11

ACC-NO-34341

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 42 | சௌமிய கார்த்திகை 1969 நவம்பர் | இதழ் 11

உள்ளுறை

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்.
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குமாரகுருநாத முதலி தெருவி லுள்ள சமாச அலுவலகத்தில் 30-11-69 ஞாயிறு காலை 9-30 மணிக்குச் சமாசச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, சமாசத் தேர்வு, ஆண்டு விழா முதலியனபற்றி ஆலோசிக்கப் பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகின்றனர்.

சமாஜ 64-ஆம் ஆண்டு விழா

1969 டிசம்பர் 26, 27, 28 ஆம் நாள் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நம் சைவ சித்தாந்த மகா சமாஜத் தின் 64-ஆம் ஆண்டு விழா காஞ்சிபுரம் ஸ்ரீ கச்சபேசர் திருக்கோயிலில் மெய்கண்டார் காவணத்தில் சிறப்புற நிகழும்.

சைவர் மாநாட்டிற்கு திரு. நல். முருகேச முதலியார் பி. ஏ., அவர்களும், சைவ மங்கையர் மாநாட்டிற்கு வித்துவான் திருமதி ப. நீலா அம்மையார் (கருமபுரம்) அவர்களும் சைவ இளைஞர் மாநாட்டிற்கு மகா வித்துவான் திரு. சி. அருணை வடிவேலு முதலியார் அவர்களும் தலைமை வகிப்பார்கள். விரிவான நிகழ்ச்சி நிரல் அடுத்த இதழில் வெளியிடப்பெறும். ஆண்டு விழாவில் தீர்மானங்கள் கொண்டுவர விரும்புவோர் அவற்றினை 15-12-69 க்குள் சமாஜச் செயலாளர் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகின்றனர்.

சமாஜத் தேர்வு

நம் சமாஜத்தால் நடத்தப்பெறும் இளஞ் சைவப் புலவர், சைவப்புலவர் தேர்வுகள் 22-11-69, 23-11-69 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 to 1 மணி, மாலை 2 to 5 மணிகளில் திருச்சிற்றம்பலம், சென்னை, யாழ்ப் பாணம் முதலிய விடங்களில் நிகழும். தேர்வுக்கு வருவோ ருக்குத் தனியாக அஞ்சல் மூலம் அறிவிப்பு அறிவிக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Reg. M. 2330

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 42	சௌமிய ஹூ கார்த்திகை 1969 நவம்பர்	இதழ் 11

அடங்கன் முறை

(ஆசிரியர்)

இத்தொடர் இன்று சைவ சமயாசாரியரான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் பாடியருளிய தேவாரப் பதிகங்களின் தொகுப்புக்கு வழங்கும் பெயராகும். இத்தொடர் பற்றி இங்குச் சில செய்திகளையும் கருத்துக்களையும் தெரிவிக்க எண்ணுகிறோம்.

(1)

தேவாரப் பதிகங்கள் நம்பியாண்டார் நம்பியால் பண் முறைப்படி அமைக்கப்பட்டமையால் முறை என்ற பெயர் பெற்றன. தெய்வத்தன்மை பொருந்திய அருட்பாசுரங்கள் ஆனமையால் திருமுறை ஆயின. திருமுறை என்ற பெயர் திருமுறை கொண்ட புராணத்துள் விளங்கக்காண்கிறோம். தேவாரம் அடங்கலும் (முழுமையும்) கொண்ட திருமுறைத் தொகுப்பு அடங்கன் முறை எனப் பெயர் பெற்றது.

அகத்தியர் தேவாரத் திரட்டின் பதிகக் கருத்துக் கூறும் அகவற்பா, 'அகத்தியத் திரட்டினை உலகில்—ஓதினர் அடங்கலும் ஓதினர் ஆவரே' என்று கூறுவதும் காண்க.

அடங்கன் முறை என்ற பெயர் பழைய ஏட்டுச் சுவடிகளிலும் காணப்படுகின்றது. 'திருஞான சம்பந்தப் பிள்ளையார் தேவாரம் அடங்கன் முறை,' 'சம்பந்தர் திருமுறை அடங்கல்' என்றெல்லாம் சுவடிகளில் காணப்படுகின்றது. தேவாரத்தை அச்சிட்டவர் பலரும் "சமயாசாரியர் மூவர் தேவாரப் பதிகங்கள்" என்றே அச்சிட்டனர். முதன் முதலில் அச்சிட்ட சபாபதி முதலியார் (1863), இராமசாமிப் பிள்ளை (1882), செந்தில்வேல் முதலியார் (1893), சண்முக முதலியார் (1898) முதலிய பலரும் "தேவாரம்" என்றே அச்சிட்டார்கள். பிருங்கி மாநகரம் நமசிவாய முதலியாருடைய நிரஞ்சன விலாசம் அச்சியந்திரசாலைப் பதிப்பு மட்டும்தான் "திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த அடங்கன் முறைத் தேவாரப் பதிகங்கள்" என்று கூறுகிறது. பின்னுல் சுவாமிநாதபண்டிதர் பதிப்பு 'அடங்கன் முறை' என்று பதிப்பிக்கப்பட்டது.

(2)

அடங்கன் முறை ஏடுகளில் காணும் ஒரு செய்தி இங்குக் குறிப்பிடற்குரியது. பெரும்பான்மையான தேவார ஏடுகளின் தொடக்கத்தில், காரைக்காலம்மையார் திருவாலங்காட்டுத் திருப்பதிகங்கள் இரண்டும் தவருது எழுதி, அதன் பின்னரே, முதல் திருமுறையாகிய சம்பந்தர் தேவாரம் தொடங்கும். சில சமயம் அம்மை பதிகம் எழுதிய ஏடுகளுக்குத் தனி எண் கொடுத்து, சம்பந்தர் தேவாரம் ஏடு, 1, 2 என்று இப்படி வரிசையாக இலக்கமிடப்பட்டிருக்கும்.

இன்னும் சில சமயம். தொடர்ந்த எண்ணே கொடுக்கப்பட்டிருக்கும். அன்றியும் அம்மை பதிகங்கள், தவருது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்றே பெயர் எழுதப்பட்டிருக்கும். சம்பந்தராதியோர் இயற்றிய பதிகங்களுக்கு இவை மூத்தவை என்றமையால், அம்மையார் காலத்தால் அவர்களுக்கு மூத்தவர், முற்பட்டவர் என்பது ஒரு பொருள்; மற்ருென்று அவர்கள் பதிகங்களை விட

அதிகச் சிறப்புடையனவாக இவற்றைச் சைவ மக்கள் கருதினர்கள் என்பது.

அன்றியும், அடங்கன் முறைப் பதிகங்கள் இத்தனை என்று கூட்டித் தொகைப்படுத்திய கணக்கில், சம்பந்தர் திருப்பதிகங்கள் 384, திருநாவுக்கரசு மூர்த்தி திருப்பதிகங்கள் 312, சுந்தரமூர்த்தி திருப்பதிகங்கள் 100, அம்மை திருப்பதிகங்கள் 2 ஆகத் திருப்பதிகங்கள் 798 என்று எழுதப்பட்டிருப்பதையும் பல பழைய தேவார ஏடுகளில் காண்கிறோம். இதனால் அம்மையாரின் திருவாலங்காட்டுப் பதிகங்கள் மட்டும் தேவாரம் போலவே கொள்ளப் பட்டன என்று தெரிகிறது.

(3)

இனி மற்றொரு குறிப்பும் இங்குக் கூறத்தக்கது. வைணவத்தில் இயற்பா இசைப்பா என்ற பாகுபாடு உண்டு. முதலாயிரம் முழுமையும் இசைப்பா; இரண்டாவதாகிய பெரிய திருமொழியும் நாலாவதாகிய திருவாய்மொழியும் இசைப்பா, மூன்றும் ஆயிரமாகிய அந்தாதிகள் முதலியன மட்டும் இயற்பா; இவை இயற்பா என்றே பெயர் தரப்பட்டுள்ளன. ஒரே ஆழ்வார் பாடிய பாடல்கள், அவற்றின் தன்மையை யொட்டி, இயல்பகுதி இயற்பாவினுள்ளும் ஏனைய இசைப் பகுதிகள் பிற இசைப் பாடற் பகுதிகளுள்ளும் அமைக்கப் பெற்றிருத்தல் காணலாம்.

இந்த முறையிலே ஆராய்ந்தால், இயற்பா இசைப்பா என்ற பாகுபாடு சைவத் திருமுறைகளுக்கும் பொருந்தி வருவதை உணர முடியும். தனி நூல்களான தேவாரம், திருவாசகம், இசைப்பா, திருக்கோவை, திருமந்திரம், பெரிய புராணம் என்பன இயற்பாடலாகும். தொகை நூல்களாயுள்ளன ஒன்பது பதினொன்று ஆகிய இரு திருமுறைகள். இவற்றுள் ஒன்பது முழுமையும் இசைத் தமிழ்; பெயரே திருவிசைப்பா; 'மோகமெறி திருவிசைப்பா' என்று புராணம் கூறும்; திருப்பல்லாண்டும் இசைப்பாடலே. எஞ்சியுள்ள பதினோராந்திருமுறை

யைப் பார்த்தால், முழுமையும் இயற்பாடலாக இருப்பது புலப்படும். திருமுகப் பாசுரம் தொடங்கி நம்பியாண்டார் நம்பிநூல்கள் இறுதியாக 40 பிரபந்தங்கள் உள்ளன. யாவும் இயற்பாக்களே.

இதற்கு விலக்கு ஒன்றே: அம்மை பாடிய நூல்கள் திருமுகப் பாசுரத்தை அடுத்து மூன்று உள்ளன. இவை திருவாலங்காட்டுத் திருப்பதிகங்கள் இரண்டு. திரு இரட்டை மணிமாலை, அற்புதத் திரு அந்தாதி என்பன. இவற்றுள் பிந்திய இரண்டும் இயற்பாக்கள். முந்தியனவாகிய திருவாலங்காட்டுப் பதிகங்கள் இசைப் பாக்கள். இவற்றைத் தேவாரப் பதிகங்களோடு சேர்த்து, முறைப்படுத்தி எழுதிய நம் ஆன்றோர், பதினோராந் திருமுறைப் பாசுரங்கள் இயற்பாக்களானமையால், அவற்றிலிருந்து இவ்விசைப் பாக்களை வேறு பிரிக்க எண்ணியே அவ்வாறு பிரித்தெழுதினார்கள் என்று நாம் கருத வேண்டும்.

(4)

தேவாரத் தொகுப்பின் பின்னர், பலவகையான சமய நூல் தொகுப்புகளுக்கு அடங்கல் முறை என்ற பெயர் ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறோம். சித்தாந்த சாத்திர ஏடொன்றுக்கு "மெய்கண்ட சாத்திரம் அடங்கல் முறை" என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது. இந்த ஏட்டில் உண்மை நெறி விளக்கத்துக்குப் பதிலாகத் துகளறு போதமே காணப்படுகிறது. இது மிகவும் திருத்தமான நல்ல நிலையில் உள்ள ஏடு. அன்றியும் இதனுள் காணப்படும் நூல் அட்டவணை பதினான்கு சாத்திரங்களை வரிசைப்படுத்தும் இடத்தில் ஆசிரியர் பெயரும் நூல் பெயரும் சொல்லி எண்ணிட்டு வரும் போது "சிற்றம்பல நாடி சுவாமிகள் துகளறு போதம் ஒன்று ஆகப் பதினான்கு" என முடித்திருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

அடுத்து தத்துவராயர் பாடிய எல்லா நூல்களும் அடங்கிய தொகுப்பு, தத்துவராயர் அடங்கல் முறை என்ற பெயரால் 1924 ஆம் வருடத்தில் அச்சிடப்பெற்

றது. இங்கும் அடங்கன் முறை என்ற தொடர் ஏட்டிலும் தத்துவராயர் வரலாறு கூறும் தொகுப்பிலும் காணப்படுகிறது. இவர் காலம் 15ஆம் நூற்றாண்டு.

இவையன்றி பட்டினத்தார் பாடல்களைத் தொகுத்த ஏடொன்றில் ''பட்டினஞ் சுவாமிகள் அடங்கன் முறை'' என்ற தலைப்புக் காணப்படுகிறது. இது மிகவும் பழமையான ஏடு. 250 ஆண்டுகளாவது இருக்கும். இங்கு சித்தர் பாடல் என்ற தொகுப்பில் காணப்படுகின்ற பட்டினத்தார் பாடல்கள் தொகுக்கப்பெற்றிருக்கின்றன. யாவும் அங்குள்ளது போல இல்லாமல் பதிகம் அல்லது மாலை என்ற தலைப்புக் கொடுத்து முறைப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளன. (இது பற்றிப் பின்னே எழுதுவோம்) இங்கு திருவிடை மருதூர் மும்மணிக் கோவையில் முதல் ஆறு பாடல்கள் எழுதப்பட்டுள்ளன; ஏடுடையவர் முழுமையும் எழுத எண்ணியிருந்தார், ஆனல் எழுதவில்லை போலும்.

இங்ஙனமாகப் பின் வந்த ஆசிரியர்கள் பலர் தாங்கள் சிறப்பாகக் கருதிய முந்தைய ஆசிரியர்களின் நூல்களுக்கு அடங்கன் முறை என்ற பெயர் அமைத்திருப்பது தெரிய வரும்.

இளையான் குடி

(மு. அ.)

இவ்வூர் 63 நாயன்மார்களுள் ஒருவராகிய இளையான் குடி மாற நாயனர் என்ற அடியவர் சரிதத்தால் பிரசித்தி பெற்றது. "இளையான் குடி மாறன் அடியார்க்கும் அடியேன்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருத்தொண்டத் தொகை முதற்பாட்டிலேயே பாடுகிறார். சேக்கிழார் இவருடைய சரித்திரத்தை 27 பாடல்களால் பாடியிருக்கிறார். இவருக்கு முந்தியெழுந்த நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திரு அந்தாதியும், பின் வந்த திருத் தொண்டர் புராண சாரமும், மாறர் வரலாற்றைக்

குறிப்பிடுகின்றன. ஆனால் இந் நால்வருள் யாரும், இளை யான் குடி எந்த நாட்டில் உள்ளது என்று குறிப்பிடாமை யால், இவ்வூர் எங்கு உள்ளது என்பது பற்றி மிகுந்த குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. தொண்டை மண்டல சதகப் பாடல் (15) மாறர் வரலாறு தொண்டை மண்டலத்தில் நிகழ்ந்த தென்று கூறுகிறது. ஆனால் இது பொருத்த முடையதாய்த் தோன்ற வில்லை. இப்பெயருடைய ஊர் அங்கிருப்பதாயும் தெரியவில்லை.

மாறன் என்ற பெயர் பாண்டியனுக்குரியது! ஆதலால் இவ்வூர் பாண்டி நாட்டில்தான் இருக்கவேண்டும் என்பது சிலர் கருத்து. இதைக் குறிப்பிட்டுப் பெரிய புராணம் உரை செய்த C K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் இராமநாத புரம் ஜில்லாவில் பரமக்குடி அருகே இப்பெயருடைய ஊர் ஒன்று உள்ள தென்றும் அவ்வூரில் உள்ள சிவாலயத்தில் மாறர் அவர் மனைவியார் சிலைகள் உள்ளன வென்றும், அங்கு மாறர் வரலாற்று விழா நடைபெற்று வந்ததென்றும், வரலாற்றுத் தொடர்புடைய இடங்கள் அவ்வூரில் காணப் படுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார். இது முழுமையும் பொருந்துமா என்பது ஐயம். மாறன் என்ற பெயரிலேயே பாண்டி நாடு என்று ஆகாது. மற்றொரு நாயனாரான சோமாசி மாறர் சோழநாட்டுத் திரு அம்பரில் வாழ்ந்தவர் என்பதையும் இங்கு நினைவு கூர வேண்டும். மாறர் சரிதத் தில் கூறப்படும் நீர்வளம் காவிரிநாடு தவிரப் பிற இடங் களுக்குப் பொருந்தாது.

சோழமண்டல சதகம் மாறர் வரலாற்றைச் சோழ நாட்டுக் குரியதாகக் கூறுகிறது. இளையான் குடி மாறன் இரவில் தெளித்த முளைவாரி அமுதளித்தான் என்பது சதகம் 16-ஆம் பாடல். முதலியார் அவர்கள் தம் உரையில் இதையும் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வூர் பற்றிய விளக்கத் தைப் பின்னே தருவோம்.

இளையான்குடிமாறர் சரிதம் சைவ மக்கள் நன்கறிந்தது. இளையான்குடியில் வேளாளர் மரபில் பிறந்த மாறர் சிவனடி

யாருக்கு அன்னமிடும் தொண்டு ஆற்றி வருகையில் சிவனருளால் செல்வம் குறைந்தும் கடமையில் வழுவவில்லை. ஒரு நாள் இவர் பசியால் வருந்தி இருந்தபோது இரவில் வந்த சிவபெருமானாகிய அடியவர்க்காக வேறு வழியின்றி வயலில் விதைத்த நெல் முளையை வாரி வந்து மனைவியிடம் தந்து, மழையால் விறகு கிடைக்காமல் இருந்த போது, கூரையிலிருந்து வரிச்சுகளை அறுத்து விறகாக்கி புன்செய்ப் பயிர்களைப் பிடுங்கிக் கறியாக்கி வைத்து, அடியவரை அழைக்க, அவர் மறைந்து விடைமீது காட்சியளித்து, மாறருக்கும், மனைவியாருக்கும் சிவலோக பதவியளித்தார்.

சிவனடியாருக்கு இளையான்குடி மாறர் அமுதளித்த சிறப்பைக் கூறுகின்ற பாடல்களில் இரண்டு, பெரிய புராணத்திலேயே மிக்க சிறப்புப் பொருந்தியவை: 443-465

இனி, மாறர் வாழ்ந்த தென்று நாம் கருதும் சோழ நாட்டு இளையான்குடியைச் சமீபத்தில் சென்று தரிசித்தோம். இத்தலம் பற்றிய குறிப்புகளைக்கீழே தருகிறோம்.

இடம்: இளையான்குடி யென்பது காரைக்காலிலிருந்து பேரளம் செல்லும் பஸ் சாலையருகே உள்ளது. திருநள்ளாற்றிலிருந்து மேற்கே ஒருமைல் தூரம் சென்று, அங்கிருந்து வடபுறம் செல்லும் கப்பிச் சாலையில் பின்னும் ஒருமைல் தூரம் சென்றால் இளையான் குடியை அடையலாம். சிறப்பான ஒரே நாயக்கர் குடும்பம்தான் இவ்வூரில் உள்ளது. குடி மக்கள் தொகை குறைவு. வேறு எவ்விதச் சிறப்புமில்லாத சிற்றூர்.

பெயர்: இளையான்குடி என்றே வழங்குகிறது. சுவாமி பெயர் திரு அனந்தேசுவரர். அம்பிகை ஏலவார் குழல் நாயகி.

கோயில்: பழைய கற்கோயில். கோபுரம் இல்லை. முன்புற வாயிலில் இருபக்கத் தூண்களும் மேல் உத்தரமும்

மட்டுமே இருக்கின்றன.' நாலுபுறத்து மதில் சுவர்களும் இடிந்து போய் இருந்த இடமே தெரியாமல் கற்களும் போய் விட்டன. பிரகாரங்களில் நெற்களமும், மாடுகட்டும் மாட்டுக் கொட்டிலும் நெல் சோடியுமாக உள்ளன. சுவாமி அம்பிகை கோயில்களெல்லாம் உள்ளன. பரிவாரக் கோயில்களு முள்ளன. அவை இடியாமல் இன்று இருப்பது பெரு வியப்பே. பரிவாரக் கோயில்களில் நிருதி விநாயகர், முருகன் மற்றொரு முனிவர் கோயில், மாறர் கோயில், சண்டேசர் கோயில்கள் உள்ளன. இவை யாவும் தனிக்கோயில்களே. லக்ஷ்மி கோயில் இல்லை. சுவாமி சன்னிதியில் நந்தி கோயில் உயர்ந்த பீடத்தில் உள்ளது. கோயிலுக் கெதிரில் திருக் குளம் படித்துறை பெற்று ஒரு காலத்தில், நல்ல நிலைமை யில் இருந்திருந்ததுபோலும். அம்பிகை கோயில் தனி மண்டபம் பெற்று வழக்கம் போல் சுவாமி சந்நிதியில் தெற்கு நோக்கியவாறு தனியாக உள்ளது.

மூர்த்தி: மிகவும் பாழடைந்த இந்தக் கோயிலில் எல்லா மூர்த்திகளும் இன்று இருப்பது மிக்க ஆச்சரியமாய் உள்ளது. தென் கோட்டத்தில் சிறிய வடிவினரான தக்ஷிண மூர்த்தி. தனிக்கோயிலில் நிருதி விநாயகர் உள்ளார். அடுத்து முருகன் கோயில், தேவியரோடும், மயிலுடனும் நின்ற கோலம். அதன் வடபுறம் லக்ஷ்மிகோயில் இருக்க வேண்டிய இடத்தில் தனிக்கோயிலில் ஒரு முனிவர் இருக் கிறார். அமர்ந்த கோலம், மிகவும் பெரிய திருத்தமான வடிவம்; வலதுகையில் சின்முத்திரையோடு கூடிய ஜபமாலை; இவருக்கு இணையான மற்றொரு வடிவம் அம்பிகை சந்நிதியில் கிழக்கு நோக்கியவாறு உள்ளது. இம்முனிவர்கள் வரலாறு விளங்கவில்லை. சனி மூலையில் தனியான கோயிலில் இளை யான் குடி மாறரும் அவர் மனைவியும் உள்ளனர். நின்ற கோலம்; சண்டேசர் பெரிய வடிவம்; அவருக்கு எதிரில் கோட்டத்திலிருந்த துர்க்கை, புடைப்புச் சிற்பமான மிகச் சிறிய வடிவம்; எட்டுக்கை உடையது. கையிலுள்ள சூலத்தால் மகிடாசுரனைக் குத்தும் நிலையில் உள்ளது.

அசுரன் தலை மட்டுமின்றி முழு வடிவமும் உள்ளது. அசுரன் தலையைத் திருப்பிப் பார்க்கிறான். அத்தலையில் தூர்க்கை குத்துவதாக சிலையுள்ளது.

சுவாமி மிகவும் பெரிய அழகான வடிவினர். அம்பிகை அழகிய மெலிந்த சிறு வடிவினர்; அழகுடைய தோற்றம். அம்பிகை வாயில் மண்டபத்தில் முன் கூறியபடி ஒரு முனிவர் வடிவமும், விநாயகர் வடிவமும், கீழ்ப்புறத்தில் உள்ளன. கும்பிட்ட கோலத்தில் மற்றொரு முனிவர் உள்ளார். மேல்புறத்தில் பெரிய பைரவரும், சிறிய சூரியரும் உள்ளனர்.

உற்சவ மூர்த்திகள் அனைவரும் உள்ளனர். சோமாஸ் கந்த மூர்த்தி வடிவமும், தனி அம்பிகையும் எல்லா மூர்த்தி களும் மிக மிகப் பழைய வடிவங்கள்; ஒரே பச்சை வடிவம். ஒருகாலத்திலுமே இப்பச்சை சுத்தம் செய்யப் பெற்றதாகத் தெரியவில்லை, அடுத்து, பெரிய விநாயகர்; சிறிய முருகன் தேவியரோடு; நடராஜரும் அம்பிகையும், திருத்தமான வடிவங்கள். சண்டேசர், அப்பர், கூத்தாடும் சம்பந்தர்; சந்திரசேகரரும் அம்பிகையும், பெரிய வடிவங்கள்; சிறப்பான பெரிய பிக்ஷாடனர். இம் மூர்த்திகளன்றி, பித்தளைக் குடை முதலான உபசாரக் கருவிகள் முன்னே இருந்திருக்கின்றன.

கும்பிட்ட கோலத்தில் ஆடவர் பெண்டிர் வடிவங்கள் சுவாமி கோயிலில் அடிவரிகளில் வரிசையாக எண்ணற்றன உள்ளன. இவ்வமைப்பு, கோயில் கட்டிய காலத்தை நிச்சயிக்க வல்ல ஓர் சான்றாக உதவும். அப்படியே சுவாமி கோயில் முன் வாயில் தென்புறத்தில் சில புடைப்புச் சிற்பங்கள் உள்ளன.

நிர்வாகம்: திருநள்ளாற்றிலிருந்து வந்த ஒரு குருக்கள் காலையில் மட்டும் ஒருவேளை பூசை செய்கிறார். இக் கோயில் காரைக்கால் பகுதியில் உள்ளது. ஆகவே இப் போது புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்தது. அங்கு அற

நிலையப் பாதுகாப்பு இலாகா இல்லாமையால் இக்கோயிலை ஒருவரும் கவனிப்பதில்லை. பூசை நடப்பதே வியப்புக்கிடமாக உள்ளது. இக்கோயில் பழைய கோயிலாயினும், கல்வெட்டுக்கள் இல்லை.

சைவ மக்கள் விழிப்படைந்து, தாங்கள் வழிபடுகின்ற நாயன்மார்களை நினைவு கூறும் சின்னங்களையெல்லாம நன்முறையில் பாதுகாக்க ஆவன செய்ய முன் வரவேண்டும்.

[இக்கோயிலுக்குக் கிழக்கே 2-மைல் சென்று தெற்கில் ஒருமைல் தூரத்தில் மாதையூர் என்ற ஊர் உள்ளது. அதுவும் இந்த நாயக்கர் ஆதிக்கத்தில் உள்ளது; காரைக்கால் பகுதி. ஆங்கு கோச்செங்கட்சோழர் கட்டிய மாடக் கோயிலும் நந்திபுகா வாயிலும் சிறப்பான மூர்த்தி வடிவங்களும் இருந்தன என்றும், கோயில் மக்களாலேயே பாழ்படுத்தப்பட்ட தென்றும், சிலைகளையெல்லாம் ஒரு அறையில் குவித்து வைத்திருக்கிறார்கள் என்றும் கேள்வியுற்றோம். பின்னொரு சமயம போய்ப் பார்த்து அதுபற்றி எழுதுவோம்.]

மானியார்

(வித்துவான் அம்பை சங்கரனார்)

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர் மங்கையர்க்கரசியார் ஆவர். அவரைச் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்துப் பலவாறு போற்றிப் புகழ்கின்றார். காரணம் திருஞானசம்பந்தப் பெருமானே அப்பெருயாட்டியாரைப் போற்றியிருத்தலின் அவர் அடிச்சுவட்டினின்றும் வழுவாது புகழ்ந்தார் என்று கூறலாம். இக்கட்டுரை மங்கையர்க்கரசியார் என்ற பெயர் இந்த அம்மையாருக்கு அவர் பெற்றோரா லிடப்பெற்ற இயற்பெயரா அல்லது யாதாவது ஒரு காரணம் கருதி வந்த காரணப் பெயரா? காரணப் பெய

ரெனில் எக்காரணம் கருதி வந்தது? அவ்வாருயின் இவ் வம்மையாருக்குரிய இயற்பெயர் யாது? என்பது பற்றி எழுந்த ஐயங்களைப் போக்கப் பயன்படுவதாகும்.

மூதன் முதலில் தேவாரத்தை அடியொற்றியே சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணம் பாடினர் என்னும் உண்மையை மனத்திருத்திக்கொள்ளல் வேண்டும். ஒரு தேவாரப் பகுதிக்கு விளக்கம் யாண்டாவது தேவையெனில் அப்பகுதி பற்றிக் கூறப்பெறும் பெரிய புராணப் பகுதியைப் பார்த்தால் உண்மை விளங்கும். அங்கிலேயில் மங்கையர்க்கரசி என்னும் பெயர் இயற்பெயரா? காரணப் பெயரா என்பதை ஆராய்தலும் நலம் பயக்கும்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் மங்கையர்க்கரசி யாரையும் குலச்சிறை நாயனுரையும் ஒரு பதிகமூலம் போற்றியுள்ளார். அப்பதிக முதற்பாடல் வருமாறு:—

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனுல்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னெடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே.

என்பதாம். இப்பாடலை அடியொற்றியே சேக்கிழார் சுவாமிகள் மங்கையர்க்கரசியார் வரலாற்றில் கூறும் பகுதி யைப் பார்க்சப்புகின் இப்பாடலில் மங்கையர்க்கரசி எனும் தொடருக்குச் சிறந்த விளக்கத்தைத் தருதலுடன் அது அந்த அம்மையாருக்கு இயற்பெயான்று திருஞானசம்பந்த ரால் சூட்டப்பெற்ற காரணப் பெயராகும் என்பதும் நனி விளங்கும். மேலும் 'மங்கையர்க்குத் தனியரசி' எனும் பாடலில் இவ்வம்மையாரை எட்டுப் பெயர்களால் சேக்கிழார் போற்றுகிருர்.

மறைந்துபோன சைவ சமயத்தை உயிரூட்டி நிலை நிறுத்திய பெருமை அவ்வம்மையாரைச் சாருமன்றோ! மேலும் நாயகனுக்கும் தனக்கும் சமய வேறுபாடு முதலிய எக்காரணங்களாலும் சிறிதும் மனமாறுபாட்டினைக் கொள்ளாமல் ஆனால் அதே சமயத்தில் தம் சமயக் கொள்கையிலும் விட்டுக்கொடுக்காமல் சைவ உலகத்திருளைப் போக்க அந்த அம்மையார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மிகச் சிறந்தன. மேலும் மிகவும் சதுரப்பாடாக நடந்து யாவருக்கும் யாதொரு அச்சம் முதலியனவும் கொடுக்காது நேர்மையான முறையில் சைவ சமயத்தை அவ்வம்மையார் பரப்பினார்கள். இதிலிருந்து ஒரு பெண் மிகவும் ஆற்றல் வாய்ந்தவளாக இருந்தால் எச்செயலையும் செய்து வெற்றி காண இயலும் என்னும் உண்மை தெற்றெனப் போதரும். இவற்றையெல்லாம் மனத்துட் கொண்டே சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மங்கையர்க்கரசி எனும் அருமைப் பெயரை அவ்வம்மையாருக்குச் சூட்டி மகிழ்ந்தார்கள் எனலாம். திருநாவுக்கரசர் காலத்துக்கு முன் பெருமானால் சூட்டப் பெற்ற திருநாவுக்கரசு எனும் பெயர் எவ்வாறு தமிழ்நாட்டில் நிலவவில்லையோ அதுபோன்றே மங்கையர்க்கரசி என்ற பெயரும் இவ்வம்மையாருக்கு முன் யாண்டும் நிலவவில்லை. பின்னரே பலருக்கும் ஏற்படலாயிற்று என்பதையும் எண்ணிப் பார்த்தால் நலம் பயக்கும். ஆகவே இது இயற்பெயரன்று. அப்படியாயின் இது சம்பந்தரால் சூட்டப் பெற்ற பெயர் என்பது எப்படி விளங்குகின்றது என ஒரு கேள்வி எழலாம். மங்கையர்க்கரசி என்று சம்பந்தர் எக்காரணம் பற்றிக் கூறினார் எனச் சேக்கிழார் சுவாமிகள் தம் மனத்துள் எண்ணி இத் தொடருக்கு விளக்கம் தருவது போன்றே இயற்றிய பாடலுள்,

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கைமானி
செங்கமலத் திருமடந்தை கன்னிநாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை

எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ்நா டுற்றவிடர் நீக்கித்தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்றலாமே.

என்று பாடலுற்றார். மங்கையர்க்கரசி என்பது உண்மையாகவே இயற்பெயராகவிருப்பின் அதன் பொருள் பலருக்கும் விளக்கக்கூடிய நிலையிலிருப்பதால் அதற்கு ஒரு விளக்கம் கூறத் தேவையில்லை. மேலும் சேக்கிழார் சுவாமிகள் காரணமின்றி மங்கையர்க்குத் தனியரசி என்று 'தனி' என்னும் அடைமொழியைக் கொடுத்துள்ளார் என்று கூறுவதும் அழகன்று. சேக்கிழார் அவ்வாறு வாளா சொல்லைக் கூறும் பாமர கவிஞர் வரிசையில் வைத்தெண்ணத் தக்கவரல்லர். இக்காரணங்களை நோக்கும்போது இப்பெயர் சம்பந்தரால் அம்மையாருக்குச் சூட்டப்பெற்ற காரணப் பெயரே என்பது நன்கு தெளிவாம்.

அவ்வாறாயின் இந்த அம்மையாரின் இயற்பெயர் யாது என்று அடுத்த கேள்வி எழும். அதற்கும் அச்செய்யுளிலேயே பதிலுள்ளது. மங்கையர்க்கரசியாரை சம்பந்தர் முதல் திருப்பாட்டில் ஐந்து திருப்பெயர்களால் போற்றுகின்றார். மங்கையர்க்கரசி, வளவர்கோன்பாவை, மானி, பங்கயச் செல்வி, பாண்டிமாதேவி என்பன அப்பெயர்களாம். இப் பெயர்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணம் பற்றிக் கூறப்பெற்றன என்பதை நுணுகி நோக்கின் புலப்படும்.

மங்கையர்க்கரசி எனும் பெயர் இந்த அம்மையாரின் சிறந்த ஆற்றல் முதலியன பற்றிக் கூறப்பெற்றது என்பது முன்னரே கண்டோம். வளவர்கோன்பாவை என்பது இந்த அம்மையாரைப் பெற்றது சோழ வமிசமாதலின் பெற்றெடுத்த சோழ அரசனுக்கும் ஏற்றம் கொடுத்து அதே சமயத்தில் பிறந்தகப் பெருமையையும் உலகறியச் செய்கின்ற தன்மையதாம். பங்கயச்செல்வி என்பது தெய்வீகத்தன்மை பெற்ற திருவனையாள் என்பதைக் குறிக்

கும். பாண்டிமாதேவி என்பது தான் வாழ்க்கைக்குப் புகுந்த இடப் பெருமையையும் அங்கு தனக்குள்ள உயர் நிலையையும் குறிக்கின்றது.

மானி என்பதும் ஒரு பெயராகும். இப்பெயரை ஏன் சேக்கிழார் குறிப்பிட்டார்? என ஆராய்ந்தால் அப்போதே இதுதான் அவ்வம்மையாருக்குரிய இயற்பெயர் என்பது தெற்றென விளங்கும். ஆனால் மானி என வாளா கூறாது எங்குக் கூறினும் அடைகொடுத்தே பல பெருமக்களும் கூறியிருப்பதை உற்று நோக்கின் புலனாகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையில்,

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்

என்று கூறியுள்ளார். இதனை அடியொற்றி எழுந்த திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பிகள்,

பூசல் அயில்தென்ன ஞர்க்குஅனல் ஆகப்பொ ருமையினல்
வாச மலர்க்குழல் பாண்டிமா தேவியாம் மானி கண்டீர்
தேசம் விளங்கத் தமிழா கரர்க்கறி வித்தவரால்
நாசம் விளைத்தாள் அருகந்த ருக்குத்தென் நாட்டகத்தே

எனக் கூறியுள்ளார்கள். சம்பந்தமூர்த்தி சுவாமிகளோ "வரிவளைக் கைம்மட மானி" எனக் கூறியுள்ளதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். சேக்கிழார் சுவாமிகள் 'வளைக்கைம் மானி' என்று கூறியுள்ளார்கள்.

மேற்கண்ட இவ்வெடுத்துக்காட்டுகளை உற்றுநோக்கின் ஓர் உண்மை போதரும். பண்டைப் புலவர் பெருமக்கள் படிப்பவர்களுக்கு ஐயமேற்படா வண்ணம் தெளிவு பெறும் பொருட்டு எவ்வளவு விழிப்புடன் செய்யுள்களை அருளிச்செய்திருக்கிறார்கள் என்பது புலப்படும்.

'மானம்' எனும் சொல் பெருமை எனும் பொருளைத் தருவது. மானமுடையவன் மனிதன் ஆவான். பிறரிடம் தன் பெருமைக்கு இழுக்கு ஏற்படும் நிலையில் எம்மனித னும் நடந்துகொள்ளக் கூடாது. ஆனல் தன் ஆசிரியரி டத்து மாத்திரம் தன் பெருமை பற்றி நினையாது ஒருவன் எல்லாப் பணிகளையும் செய்யவேண்டும் என்பது நம் முன்னேயோர் கொள்கை. அப்படி எவனுவது மானமுள்ள வனுயிருந்தால் அதனுல் ஆசிரியருக்குச் செய்யத்தக்க பணி யில் முட்டுப்பாடேற்படும். ஆகவே அத்தகையவனுக்குப் பாடம் போதிக்கக்கூடாது என்பதும் பண்டையோர் கொள்கை. எவ்வெவருக்குப் பாடம் கற்பிக்கக் கூடாது என்பதைக் கூறப்புகுந்த நன்னூலாசிரியர்,

களி மடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறனின் ஞேர்க்குப் பகரார் நூலே.

என்று கூறியுள்ளார். இச்சூத்திரத்துள் 'மானி' என்பது மானமுள்ளவனைக் குறிக்கும். மானி=மானமுள்ளவன் என ஆண்பாற் பெயராகப் பொருள் கொள்ளத்தக்க நிலை யில் இப்பெயர் இருத்தலின் அவ்வாறு யாரும ஆணெனக் கருத இடமளிக்கா வகையில் பெண்பாலெனக் குறிக்கத் தக்க நிலையில் அடைகளோடு சேர்த்தே இம மானி எனும் பெயரைப் பல ஆசிரியர்களும் ஆண்டுள்ளனர். மானி= மானமுடையவள் என்று பெண்பாலுக்கும் இப்பெயரைக் கொள்ளலாம். ஈண்டுப் பெண்பாலெனத் தெளிய வைக் கும் பொருட்டே எல்லா ஆசிரியர்களும அடைகளொடு சேர்த்தே வரி வளையாள் மானி, பாண்டிமாதேவியாம் மானி, வரிவளைக்கைம் மடமானி, வளைக்கைமானி எனக் கூறுவா ராயினர்.

மேலும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் புராணத் துள்ளும்

......................" சண்பைமன்னர்
மன்றலங் குழலியாராம் மானியார் தமக்கும் மானக்
குன்றென நின்ற மெய்ம்மைக் குலச்சிறை யார்தமக்கும்
நன்றுதான் வினவ" (2515)

என்றும்

ஞான போனகர் எதிர்தொழுது எழுந்த நற்றவத்து
மானியார் மனக்கருத்து முற்றியது எனமதித்தே
பானலங் கண்கள் நீர்மல்கப் பவளவாய் குழறி
"யானும்என் பதியும் செய்ததவம் என்கொல்" என்றார்
(2575)

என்றும்

"வெண்பொடி பூசுந் தொண்டர் விரவினர் அவரை எல்லாம்
கண்டுமுட் டடிகள்மார்கள் கேட்டுமுட் டியானுங் காதல்
வண்டுணைத் துதைந்த கோதை மானியே! இங்கு வந்த
பண்புமற் றிதுவே யாகும் பரிசுவே றில்லை" யென்றான்
(2595)

என்றும்

மானியார் தாமும் அஞ்சி "வஞ்சகப் புலையர் தாங்கள்
ஈனமே புரிய வல்லார் செய்வதென் நாம்" என்றெண்ணி
"ஞானசம் பந்தர் தம்பால் நன்மையல் லாது செய்யும்
ஊனம்வந் தடையில் யாமும் உயிர்துறந் தொழிவது"
என்றார். (2599)

என்றும் பல இடங்களிலும் சேக்கிழார் சுவாமிகள் இவ்வம்மையாரின் இவ்வியற் பெயரைச் சுட்டியிருத்தலையும் காணலாம்.

ஆகவே இதுகாறும் கூறியவாற்றான் மங்கையர்க்கரசியார் என்பது அவ்வம்மையாருக்குத் திருஞானசம்பந்தரால் சிறப்பாகச் சூட்டப்பெற்ற காரணப்பெயரென்பதும் மானியார் என்பதே அவ்வம்மையாரின் இயற்பெயராயிருத்தல் வேண்டும் என்பதும் போதரும்.

முப்பெரு மணிவிழா

(துணையாசிரியர்)

நம் சமாஜச் செயற்குழு உறுப்பினர் பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார் எம். ஏ., பி ஓ. எல் அவர்களுக்கு மணிவிழா 16—10—69 வியாழன் மாலையில் எ. வி எம். இராசேசுவரி கல்யாண மண்டபத்தில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. பொள்ளாச்சி வள்ளல் திரு எஸ். மகாலிங்கம் பி எஸ்ஸி., எம். ஐ இ. அவர்கள் தலைமையில் மகாவித்துவான் திரு மே. வி. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் வரவேற்புரையும், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு கே வி. சுப்பையா அவர்கள் தொடக்கவுரையும் சிறப்புற நிகழ்ந்தன.

கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் "முதுபெரும் புலவர்" என்னும் பட்டமளித்துச் சிறப்புச் செய்தார்கள். நம் சமாஜத் துணைத்தலைவர் திரு கே. இ. அருணுசல முதலியார் அவர்கள் பொதுமக்களிடமிருந்து திரட்டப் பெற்ற பொற்கிழியை அளித்தார்கள். இம் மணிவிழா சம்பந்தமாக திரு. முதலியார் அவர்களின் சிறப்பியல்புகள் ஒருசேரத் தெரியத்தக்க வகையில் சிறப்பு மலர் ஒன்றும் திரு. கி. வா. சகந்நாதன் அவர்களால் வெளியிடப் பெற்றது. தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், திரு ம பொ. சிவஞான கிராமணியார், திரு. எம். பக்தவத்சலம் பி ஏ , பி. எல். திரு. நெ து சுந்தரவடிவேலு எம் ஏ., எல். டி , முதலிய பல பெருமக்கள் வாழ்த்துரை வழங்கினர். மேலும் பல பெரியோர்களும் சபைகளும் மணிவிழாத் தம்பதிகளுக்கு வாழ்த்து. பொன்னுடை, மலர் மாலை முதலியன அணிவித்தன. நம் சமாஜச் சார்பில் சமாஜத் தலைவர் திரு கோ மு. முத்துசாமிப் பிள்ளையவர்கள் (ஐ. ஏ. எஸ் ஓய்வு) பட்டாடை போர்த்தி மாலை அணிவித்து வாழ்த்தினுர்கள்

நம் சித்தாந்த ஆசிரியர் திரு மு. அருணுசலம் எம் ஏ அவர்களுக்கும் 26 – 10 —69 ஞாயிற்றுக்கிழமையன்று அவர் பிறந்த ஊராகிய திருச்சிற்றம்பலத்தில் மணிவிழா நிகழ்ந்தது. நம் சமாஜச் சார்பில் செயலாளர் திரு. மு நாராயணசாமி முதலியார் அவர்களும் யானும் சென்று மணிவிழாத் தம்பதிகளை முறையே பட்டாடை போர்த்தியும் வாழ்த்தியும் சிறப்பித்தோம் திரு. மு. அ. அவர்கள் தம் மணிவிழாவை

அடக்கமாகவே செய்து கொண்டார். அதனாலேயே பலருக்கும் அழைப்பு விடுக்கவில்லை. வைதிகச் செயல்களில் சிறிதும் குறை வைக்காது சிறப்புடன் நடத்தினார்கள். சைவர்கள் தங்கள் வீட்டு வைதிகச் செயல்களை சிவாச்சாரியர்களைக் கொண்டே செய்துகொள்ள வேண்டும் என்னும் கொள்கையுடையவராதலின் அதன்படியே இவ்விழாவையும் திரு ஓமாம்புலியூர் சிவாச்சாரியாரைக் கொண்டே மிகவும் சிறப்புடன் செய்து கொண்டார்கள்.

இவர் ஆடம்பரப் பிரியர் அல்லர். ''செய்தக்க செய்யாமையானும் கெடும்'' என்ற தன்மையை ஓர்ந்து எது செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொள்ள விரும்பினார். பிறர் மெச்ச எதையும் தம் வாழ்க்கையில் நடத்திக் காட்ட விரும்பாதவர். சிவபூசா துரந்தரர். சிதம்பரத்தில் நிகழ்ந்த நம் சமாஜ மாநாட்டின்போது ஏறக்குறைய 40 பேருக்குமேல் சிவதீக்ஷை பெறவும் 10 பேர் சிவபூசை பெறவும் சூரியனார் கோயிலாதீனம் சிவாக்கிர யோகி பரம்பரை ஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிக பரமாசாரியரைக் கொண்டு வாய்ப்புண்டாக்கியவர். அந்த சுவாமிகள் தம் உடல்நலமற்றிருந்தும் இம் மணிவிழாவின் போதும் நேரே வந்து மணிவிழாத் தம்பதிகளை வாழ்த்தியருளியது மிகவும் குறிப்பிடத் தக்கது.

இவர் நம் சமாஜத்துக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தேவாரம், திருவாசகம், சித்தாந்த சாத்திரம், சங்க இலக்கியம், சிந்தாமணி போன்ற நூல்கள் வெளிவரப் பல்லாற்றானும் துணையாயிருந்தவர். '' நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும் '' இடைவிடாது தம் வாழ்க்கையிலிருக்க விரும்பிப் பல பெரியோர்களை விரும்பிச் சென்றார். அதனால் அவருக்கு டாக்டர் உ வே. சாமிநாதய்யர், திரு. வி க, திரு டி. கே. சி., இராஜாஜி, ஞானியார் அடிகள், திரு. ச. அனவரதவிநாயகம் பிள்ளை, திரு வி. உலகநாத முதலியார், வினோபா பவே, மா. பாலசுப்பிரமணிய முதலியார் முதலிய நல்லாரிணக்கத்தை இவர் பெற்றதில் வியப்பில்லை. அவர்கள் யாவராலும் மிக நன்முறையில் போற்றப் பெற்றவர்.

வடமொழி சமய அறிவுக்கு மிக இன்றியமையாதது. ஆகவே யாவரும் வடமொழியைப் படிக்கவேண்டும் எனும்

கொள்கையினர். அதனால் தாம் எழுதுவதிலும் பேசுவதிலும் வடமொழிச் சொற்களை வெறுப்பு விருப்பின்றி மேற்கொள் வார். ஆனால் வடமொழிச் சொற்களைத் தமிழிலக்கணத்திற் கேற்ப கோஷ்டி என்பதைக் கோட்டி என்று மாறுபடுத்தி எழுதுவதற்கும் இசையார். அப்படியே அச்சொல் தமிழில் வழங்கினால் அதனால் தமிழ் கெட்டுவிடாது என்னும் கொள்கையினர். அரியநாயகிபுரம் அனந்தகிருஷ்ண சாஸ்திரி கள், இராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த சுவாமி அபிநாச னந்தர், காசி சர்வகலாசாலையைச் சார்ந்த பேராசிரியர் டாக்டர் டி. ஆர். சி. மூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் போன்றவர்களிடம் உபநிடதங்கள், சூதசம்ஹிதை, பகவத் கீதை. சாக்கிய காரிகை போன்ற வடமொழி நூல்களை முறை யாகப் பாடம் கேட்டிருக்கின்றார்.

இவர்கள் காசி சர்வகலாசாலையில் சைவ சித்தாந்த ஆசிரியராக இரண்டாண்டுகளிருந்து பிறகு அங்கிருந்து காந்தீயத் துறையிலீடுபட்டு வினோபாபவே, அரியநாயகம், ஜே. சி. குமரப்பா போன்றவர்கள் நட்பைப் பெற்றார்கள்.

ஆதாரக் கல்வித் துறையில் மிகவும் ஈடுபாடு கொண்டு படித்து அதன்படி நாளும் நடந்து வருபவர். அக்கல்வி சம்பந்தமாகப் பல நூல்களை எழுதியதோடு அக்கல்வி நாட்டில் பரவினால் மக்கள் அவசியம் பயனடைவார்கள் என்னும் உறுதிப்பாடுடையவராய்ப் பல்லாயிரக் கணக்கான மாணவ மாணவியருக்கெனத் திருச்சிற்றம்பலத்திலேயே தம் நேர் கண்காணிப்பில் ஓர் ஆதார நடுநிலைப்பள்ளி, ஒரு பெண் கள் உயர் பள்ளி, ஓர் ஆண்கள் ஆதாரப் பயிற்சிப் பள்ளி, (முதுநிலை) ஆகிய மூன்றினையும் நடத்தி வருகின்றனர். நகர வாழ்வை வெறுத்து நாட்டுப்புற வாழ்வைக் காந்தியார் கொள்கைப்படி மேற்கொண்டு அத் திருச்சிற்றம்பலத்தைப் பெயரளவிலில்லாது உண்மையாகவே திருச்சிற்றம்பலமாக்கி யுள்ள பெருமை இவர்களைச் சாரும்.

வேளாண்மை நூல்கள் இரண்டிற்கும் முதியோர் கல்விக் குரிய நூல்கள் நான்கிற்கும் அரசினர் பரிசினைப் பெற்றவர் கள். இன்னும் இவர்கள் பல் துறைப் புலமை மிக்கவர்களாத

லின் அவ்வத் துறையிலும் பல நூல்கள் எழுதித் தமிழ்த் தாய்க்கு அணிசெய்துள்ளார்கள். அவற்றினை விரிக்கிற் பெருகுமென்றஞ்சி விடுக்கின்றேன்.

இன்றும் இவர் 60 ஆண்டு இளைஞராகவே காட்சி தருகின்றார். அவர் உடலும் உள்ளமும் உழைப்புக்கோ படிப்புக்கோ சலிப்படையா நிலையில் ஆர்வம் கொண்டுள்ளன. தம் மணிவிழாவின் நினைவாக "சைவ சமயம்" என்னும் அரிய நூலை வெளியிட்டுள்ளார். ஐந்து ஆண்டுகளில் பதினைந்து தொகுதிகளாகத் தமிழ் இலக்கிய வரலாறு முழுமையும் எழுதத் திட்டமிட்டு அதன்படி மார்ச்சு 69-ல் இரண்டு தொகுதிகள் வெளியாகியுள்ளன. இன்னும் மூன்று தொகுதிகள் அச்சுக்குக் கொடுக்கும் நிலையில் உள்ளன.

இவர்கள் மணிவிழாவில் கரந்தை திரு. நீ. கந்தசாமி பிள்ளையவர்கள் தலைமையில் பாராட்டு விழா ஒன்று நிகழ்ந்தது. அங்கு வந்திருந்த நம் சமாஜ முன்னாள் செயலாளர் திரு. S. வடிவேல் பிள்ளை, வித்துவான் சுந்தரமூர்த்தி, வித்துவான் கல்யாணசுந்தரம், வித்துவான் சிங்காரவேல் எம். ஏ. திரு. தி கி நாராயணசாமி நாயுடு முதலிய பலர் சித்தாந்த ஆசிரியரின் உண்மைப்பணியைப் பாராட்டிப் பேசினர். எது தமக்குச் சரியெனத் தோன்றுகிறதோ அதை யார் எதிர்க்கினும் அஞ்சாது கூறும் தன்மையுடையவர். ஏடு பார்ப்பதில் இணையற்ற ஆற்றல் வாய்ந்தவர். அக் குக்கிராமத்தில் ஒரு சிறந்த நூல் நிலையத்தையும் கணக்கற்ற ஏடுகள் கொண்ட ஓர் அருமையான சுவடி நிலையத்தையும் தம் உயிரினும் மேலாகக் கருதி வைத்துப் போற்றி வருகின்ற திறம் மிகவும் மெச்சும் தன்மையது. டாக்டர் ராவ்பகதூர் தணிகைமணி திரு வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் எம் ஏ., டி. லிட். எவ்வளவு முதிர்ந்த வயதினர், தற்போது எந்த நிலையிலிருக்கின்றனர் என்பது முன் சித்தாந்த இதழ்கள் வாயிலாய் அன்பர்களுக்குத் தெரிந்திருக்கும் அவர்களே தம் முதிர்ச்சியையும் கருதாது பாராட்டி மணிவிழாத் தம்பதிகளை வாழ்த்திப் பாக்கள் பாடி அனுப்பியிருக்கின்றனரெனில் இவர்கள் பணிக்கு இதனைவிட வேறு பெருமையும் வேண்டுமோ?

அப்பெரியார் வாழ்த்துக்கள் பின்வருமாறு :-

திருத்தணிகேசர் துணை.

ஆய செந்தமிழ்ப் பாடல்கள் டி. கே.
சியைப் போல அழுத்தம் திருத்தம்
ஏயப் பாடுநின் நற்றிறம் என்னைத்
தூய நின்பாற் படுத்தது மெய்யே

எந்த இடம் சென்றாலும் என்மனமாம் நின்னன்பன்
அந்தசுப வேளைதனில் அங்கிருப்பான் - நந்தம்
தணிகைப்ர சாதம் தபாலில் உளதே
அணிமின் அணிமின் அதை.

நினைத்தால் முத்தி அளிக்கின்ற
நின்பேர் கொண்ட அம்மலையில்
எனைத்தோ ரூழி வாழ்கின்ற
இமையோர் பெருமான் இன்னருளால்
அனைத்தாம் ஞானம் நீபெற்றிவ்
வவனி தன்னிற் பல்லாண்டு
தினைப்போ தளவும் நோயின்றிச்
செல்வம் மல்க வாழ்வரயே.

தங்கள் சஷ்டி பூர்த்தியைத் தங்கள் மக்கள் கூட்டியே
மங்களத் துடன்செயக் கேட்டு எம்ம கிழ்ந்தனம்
நங்கள் வேற்கை நாதரின் நல்ல ருட்பெ ருக்கினால்
துங்க வாழ்வு பெற்றுநீர் சுகநி றைந்து வாழ்கவே

இறுதியாக நம் சமாஜத்தில் நீண்ட காலமாகத் துணைச்செய லாளர், செயற்குழு உறுப்பினர். பொருளாளர் முதலிய பல்வேறு நிலையிலுமிருந்து கண்ணிணைக் காக்கின்ற இமை யின் சமாஜ முன்னேற்றத்தைக் காத்து வருகின்ற பெரியார் திரு. நே. த. கிருட்டினசாமி முதலியார் எம் ஏ., பி. டி. அவர்கள் ஆவர். அவருக்கும் மணிவிழா 31-10-69 வெள்ளி யன்று நிகழ்ந்தது. அவர்கள் ஆடம்பரமின்றி கபாலீச்சரத் தில் விநாயகர், முருகர், கபாலீச்சுரர், கற்பகாம்பிகைக்குத்

திருமுழுக்காட்டிச் சிறப்புவழிபாடாற்றினார்கள். சமாஜ அன்பர்கள் பலரும் போந்து தங்கள் மகிழ்ச்சியையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

இம்மூன்று மணிவிழாத் தம்பதிகளும் சமாஜத்தின் ஆணிவேர் போன்றவர்கள். சமாஜத்தைத் தொடங்கிப் பாதுகாத்துவந்த பண்டைச் சான்றோர் பலரையும் ஒவ்வொருவராய் இழந்து வந்துள்ளோம். அவ்வாறுள்ள காலத்து இத்தகைய பெரியார்களைக் காணும்பேறு பெற்றமையாலேயே ஒருவாறு மனம் சாந்தி பெறுகின்றது. இவர்கள் வாழ்வு நம் சமாஜ வாழ்வு; நம் சமய முன்னேற்ற வாழ்வு. ஆகவே அவர்கள் இன்னும் இந்நிலத்து நீடுவாழ கற்பகாம்பிகை சமேத கபாலீச்சுரப் பெருமான் தண்ணருள் புரிய வேண்டும். அவர்கள் வாழ்வால் நம் சமயக் கொள்கைகள் யாண்டும் பரவி நாடு முன்னேற்றமடைய அப்பெருமான் திருவருள் புரிவானாக.

"ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே"

காரைக்காலம்மையார் சரித்திர ஆராய்ச்சி

(தி. மு. சபாபதி தேசிகர்.)

காரைக்காலம்மையார் காலம் சுமார் கி. பி. மூன்றும் நூற்றாண்டின் இறுதியெனக்கூறலாம். சோழ நாட்டில், காரைக்காலென்னும் பட்டினத்தில், பெருவணிகராகிய தனதத்தரென்பவரின் தவப்பெருக்கால் திருமடந்தை அவதரித்தாளெனத் திரு அவதாரம் செய்து, புனிதவதியாரெனும் பெயரோடு சீரும் சிறப்புமாய், அசையுநடைப் பருவத்தே பணியணிவார் தமைப்பரவும் பண்போடு வளர்ந்து, மழலைச் சொல் வரும் போதே வண்டல் பயில்வனவெல்லாம் வளர் மதியம் புனைந்த சடை அண்டர் பிரான் திருவார்த்தை அணைய வருவனவாயின்று, அழகில் கொழுந்தென வளர்ந்து வரலானார். அம்மையாரைக் கல்வி பயில விட்டதாகக் காணவில்லை. நடைபயிலும் போதும், சொல்பயிலும் போதும், வயது வந்த

பின் அடியார்களைக் காணும்போதும் இறைவனிடம் அன்பு மேலிட்டுப்பத்தியாய் இறைவழிபாட்டைச் செய்து வந்தாரென்பதே சேக்கிழார் பெருமான் திருவாக்கு. அம்மையார் சாமுசித்தர்; முற்பிறவியிலேயே அனைத்தும் முடித்தவர். ஓதாமற்பலகலையும் உணர்ந்து ஒளிரும் சிவஞானவுருளன உமாபதி சிவம்கூறியவாற்றல் உணர்க. ஞான சம்பந்தப் பெருமானும், மெய்கண்டதேவரும் போன்றரே அம்மையார்.

'பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்.'

என்று அம்மையாரே கூறுகின்றார்.

அம்மையாருக்கு மணப்பருவம் வந்ததும் இவர் தந்தையார் நாகைப் பட்டினத்தே உழைப்பால் உயர்ந்து புகழ்மிக்குடையவரும் தம் குடிச்சிறப்புக் கொப்பானவருமான நிதிபதியின் மகன் பரமதத்தனுக்கு மணம் பேசி முடித்து, சீரும் சிறப்புமாய்த் திருமணத்தைச் செய்து வைத்து. தம் குடிக்கு ஒரே மகளாதலின் வேட்டகம் அனுப்பாமல் காரைக்காலிலேயே தனிமாடம் அமைத்துத்தந்து கணவனோடு இருந்து வரச் செய்தார்.

அம்மையார் தம் குடிப்பண்பின்படி இயல்புடைய மூவர்க்கும் உணவு அளித்து, இல்லறத்தை நல்லறமாக்கி வந்தார். தம் கணவன் தனித்து வாணிகம் செய்யத் தொடங்கிச் செவ்வனே நடத்தி வருநாளில் ஒரு நாள், வாணிக நிமித்தம் வந்தவர் ஒருவர், இரண்டு மாங்கனிகளைக் கொடுக்க, அவற்றைப் பரமதத்தன் வீட்டிற்கனுப்பிவைக்க அவ்வமயம் அடியார் ஒருவர் பசிஎன்று தம் இல்லத்திற்கு வர, அம்மையார் பார்த்து, 'பசி வந்திடப் பத்தும் பறந்து போமென்பார்களே, காலை நேரமாயிருக்கின்றதே, கறியமுது ஒன்றும் கைகூடவில்லையே, திருவமுது மட்டுமே கூடியுள்ளதே, "ஆற்றுவாராற்றல் பசியாற்றல்" அன்றோ? என்று தம் கணவன் அனுப்பிய மாங்கனி நினைவுக்கு வர, அடியாரை இருத்தித் திருவமுதும், கனியமுதும் படைத்து, பசிநீக்கி அனுப்பிய பின் நடுப்பகல் தம் கணவன் வந்து உணவருந்தும்போது மற்றொரு கனியைப் படைக்க, கனிசுவையாயிருக்கவே, இன்னொரு கனியுளதே, அதையும் கொண்டு வருவாய்' என்ன, ஒரு சிந்தனையுமின்றிக் கணவனுக்கு எதிர்பேச அஞ்சி, கனி "கொண்டுவர அணைவார்போல் அங்ககன்று" உள்ளே சென்று

என்ன சொல்லுவதென்று ஏங்கிச் சிந்தித்திருக்கும் போது இறைவன் திருவருளால் அதிமதுரக்கனியொன்று அம்மையார் கையில்வர அதைக் கணவனுக்களிக்கக் கணவன் உண்டு, அதுகாறும் தன் நாவறியாச் சுவை மிக்குடையதாய் இருத்தலால், தன்னையறியாத நிலையில் சுவையில் லயித்து, மனைவியைப் பார்த்து, ''எனக்கு இக்கனி இரண்டையும் ஒருவரே கொடுத்தார். கனிகள் ஒரு வித்தியாசமுமில்லாமலிருந்தன. முதல் உண்டகனியினும் இப்போது உண்ட கனியின் சுவையை என்னென்று சொல்லுவது மாங்கனியோடு மற்றெல்லாக் கனியின் சுவையும் கலந்தவாய் வாக்கினுல் சொல்ல முடியாத அமிர்தமென்பார்களே அதைப்போன்றுள்ளதே, இஃது ஏது?' என்று வினவ, அம்மையாருக்குத் தருமசங்கடமுண்டாகி, ''என்ன செய்வது?'' செவ்வியபேரருள் விளம்புந்திறமன்று.

''மந்திரமும் தேவும் மருந்தும் குருவருளும்
தந்திரமும் ஞானந் தருமுறையும் – யந்திரமும்
மெய்யெனின் மெய்யாய் விளங்குமே; மேதினியில்
பொய்யெனில் பொய்யாகிப் போம் !

இறைவன் அருளைப் பிறருக்குச் சொலலக்கூடாது. 'சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைக்க வேண்டுமே' என்று ஒரு புறம், ''கற்புடைய மகளிருக்குக் கணவனே கடவுள். கணவனிடம் பொய்சொல்லக்கூடாதே!'' ''கைவருகற்புடைய நெறியாற் கணவனுரை காவாமை மெய்வழியன்று செய்தபடி சொல்லுவதே கடன், ''என்று தெளிந்து, கனி கைக்கு வந்த வரவைக் கூறினர்.

'இஃது உண்மையா? இப்படியும் நடக்குமா? இஃது உண்மையாயின், நான் காண இன்னொரு கனியை வரவழைப் பாய்,'' என்றுன் பரமதத்தன். ''அது எளியதன்'' என்றுர் சேக்கிழார் பெருமான், அம்மையார், இதேது சோதனை; இறைவரே! முன்னர் நான் கனி கேட்கவில்லை. 'சொல்லாமலே பெரியர் செய்வர்' என்றபடி கேளாமலே கனி கைக்கு வந்தது. இப்போது என் கணவர் அஃதுண்மையாவென வினவுகின்றுர். அப்போது கனி கொடாதிருந்தால், இவ்வின்னல் உண்டாகாதே. இப்போது என் கணவர் காணக்கனியொன்றருள வேண்டும். கேளாமலே அருளிய கனி கேட்டபின் தாராதொழிவிரோ?

"ஈங்கு இஃது அளித்தருளீரேல் யென்னுரை பொய்யாம்." அடியாள் பொய்யளாவதோடு தேவரீர் திருவருளும் பொய் யாகி விட்டால் என்னுவது?

'உண்மை அறிவு ஆனந்தஉரு' ஆகியவராயிற்றே! கனி யொன்றருள வேண்டும்'' என வேண்ட, இறைவன் திருவருளால் கணவன் கண்டு அதிசயிக்க மற்றோர் அருட்கனி அம்மையார் திருக்கரத்தே வர, அக்கனியைக் கணவன் கையிலிட, கனி மாயமாய் மறைந்துவிட்டது 'ஏதுக்களாலும் எடுத்தமொழியாலும் சோதிக்கவேண்டா, 'என்பது பெரியார் கூற்று. கனி வந்ததும், சென்றதும் கண்ட கணவன் அம்மை யாரிடம் பேரச்சங்கொண்டு, அவரைக் கடவுளாகக் கருதி, தம் கருத்தை வெளிக்காட்டாமல் சின்னுள் உடன் உறை யாதிருந்து, எப்படியேனும் நீங்கிவிட வேண்டும் என்ற நினைப்போடு பொருளீட்டு நிமித்தம் போய்வருவதாக அம்மை யாரிடம் கூறி விடைபெற்று ஒருவருங்காணுமல் பாண்டி நாட்டு ஒரு பட்டணத்தே தங்கிப் பெரும் பொருளீட்டி மறு மணம் செய்து கொண்டு பெருவாழ்வு வாழ்ந்து வரும்போது ஒரு பெண்மகவு பிறக்க, அக்குழந்தைக்குத் தன் உள்ளத்தே வழிபடு கடவுளான முன்மனைவியின் திருநாமமாகிய' புனிதவதியென்றே பேரிட்டு வாழ்க்கை நடத்தி வந்தான்.

சுமார் 5 அல்லது 6 ஆண்டு வரை வாணிக நிமித்தம் சென்ற கணவன் வாராமையால், அம்மையாரின் தந்தை யாரும் ஏனையோரும் தேடிப் பின்னர் பாண்டிநாட்டொரு பதியிலிருப்பதை அறிந்து, அங்கு அம்மையார் போகவிரும்பிய தனுல் தக்க பரிவாரச்சிறப்புகளோடு சிவிகை மீதேற்றி யனுப்ப, அம்மையார் அங்குச் சென்று கணவனுக்குச் செய்தி யனுப்ப, கணவன் மறுமனைவியுடனும் பிறந்துள்ள பெண் மகவுடனும் பாதபூசைக்கு வேண்டிய சாமான்களுடனும் சுற்றத்தினர்களையும் நட்பினர்களையும் அழைத்துக்கொண்டு வந்து அம்மையாரை அடியுற வணங்கி, பாதபூசை செய்து, அம்மையீர் தேவரீரைத் தெய்வ அணங்கென உணர்ந்து நீங்கி மறு மனைவியார் பால் பெற்ற இப்பெண்மகவிற்கு உமது திரு நாமத்தையே வைத்தேன்.

''நற்பெருந் தெய்வமாதல் நானறிந் தகன்ற பின்னைப்
பெற்ற இம் மகவு தன்னைப் பேரிட்டே னாத லாலே
பொற்புறப் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின்,

என்று உறவினர்களையும், நட்பினர்களையும் வணங்கச் செய்தான்.

திருவருள் உணர்வு கைவரப்பெருத கணவனுக்கு மனைவியார் இறைவன் தந்தகனியை உண்டபின்னர்க் கூடவா திருவருள் உணர்வு ஏற்படாது,? மீண்டும் சோதிக்க எண்ணினுன்? அந்நிலைக்குத் தகுதியுற்றிருந்தால், அம்மையைக் கயிலைக்கனுப்பவும் அற்புதத்திருவந்தாதியையும், திருவிரட்டை மணிமாலையாம் அருவிலக்கியத்தையும் தோற்றுவிக்கவும், கயிலையில் காணும் காட்சியைத் திருவாலங்காட்டில் கண்டானந்திக்கவும், மூத்த திருப்பதிகம் பாடி நாமுய்வதற்கு வழிகிடைத்திருக்குமா? நம் தமிழகத்தவப் பயனன்றோ கணவன் சோதனைக்கனி கேட்டது? இந்நிகழ்ச்சி நடைபெருதிருந்தால், அம்மையாரின் அரும்பெரும் பக்தியை நீறுபூத்த நெருப்புப்போல அவர்தாமே அனுபவித்து இறையடி சேர்ந்திருப்பார். அவ்வருள் நாமுமடையக் கணவன் நிமித்த காரணமாயினுன். ஆகவே, அவனுக்கு நாம் முன்னர் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இறைவன் பெருங்கருணையும் வணிகன் வாக்கில் நின்று உலகறியச் செய்ததும் நம் தவப்பயனே. அப்போது புனிதவதியாருக்குச் சுமார் 25-வயது இருக்கும். அவரது குடும்பம் நல்ல செல்வஞ் செழித்த குடும்பம், அவர் பேரழகுடையவர் "பொங்கிய பேரழகு மிகப் புனிதவதியார்" "திருமடந்தை அவதரித்தாளென, "அழகின் கொழுந்தெழுவதென, "பூப்பயில்மென் சூழல் மடவார்," "அன்னம் அனையார்," "தளிர்அடிமென்னகை மயில்," "அணிகுழலாள்" எனச் சேக்கிழார் பலவிடங்களில் பாராட்டியுள்ளார்.

கணவன் தம்மைத் தெய்வமெனக் கருதி விட்ட பின், 'கணவன், குடும்பம், என்ற ஒரு பற்றுக்காக இத்தனையாண்டுகள் காத்திருந்தோம்! கணவன் அறவே விடுவித்துக் கொண்ட பின் இப்பற்று விடற்குப்பற்றற்ருன் பற்றினைப் பற்றுதலன்றி உய்யும்வழியில்லை, எனத்தேறி, கயிலையில் கண்ணுதலைக் கண்ணாரக்கண்டுகளிக்க உறுதி பூண்டார்.

" இளமையும் வனப்புமுடைய இவ்வுடலோடு வடதிசைக் கயிலைக்குச் செல்ல முடியுமா? காட்டு மிருகங்களாலும், காமுகராலும் உயிருக்கும், கற்புக்கும், பங்கமுண்டாகுமே", என்று, "இவனுக்காகத் தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்து உன்பால் ஆங்கு நின்ருடும் பேய்வடிவடியேனுக்குப்

பாங்குற வேண்டும்'' என வேண்ட' அவ்வாறே இறைவர் அருள் செய்தார். "கண்டவர் வியப்புற்றஞ்சிக் கையகன் றேடும்'' பேய்வடிவைப் பெற்றதால் யாதொரு பயமுமின்றி வடதிசைத் தேசமெல்லாம் மனத்தினுங்கடிதிற் செல்லும் போது அற்புதத் திருவந்தாதியாம் 101 பாடல்களைப் பாடிக் கொண்டே கயிலைமால் வரைக் கேகினர். "அற்புதத் தெய் வம் இதனின் மற்றுண்டோ?'' என்ற இறைவரிடம் அற்புதப் பெரும்பேற்றை அடைய அற்புதமாகிய வடிவைப் பெற்ற அம்மையார் பாடியருளிய முதற்பகுதிக்கு 'அற்புதத் திருவந் தாதி' என்றுதானே பெயரமையும்? இதுகாறும் அம்மையார் இறைவரைக் கண்டிலர். ஆகவேதான் "அன்றுந் திருவுரு வங்காணாதே ஆட்பட்டேன்; இன்றுந் திருவுருவங் காண்கி லேன்,'' என்று அம்மையாரே பாடியுள்ளார். சேக்கிழார் பிரானும் "எண்டிசை மாக்களுக்கு யான் எவ்வுருவாய் யென்னெனன்பேன்,'' என்றார்.

உலகில் பிறந்தோர் அனைவரும் உடல் உறுதியோடு வனப்புடன் வாழ விரும்புவது இயற்கை. ஆகவே பெரியோ ரும், "நெடுநாளிருந்த பேரும் காயகல்பந்தேடி நெஞ்சு புண் ணுவர்.'' உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'' என்றார்கள்

"ஒருவரும் விரும்பாததும் எல்லோரும் வெறுக்கக் கூடிய துமான பேய் வடிவு அடியேனுக்குப் பாங்குற வேண்டும்'' என்று அம்மையார் வேண்டிப் பெற்றார். ஏன்? மூவர்கள் முதல் தேவர் அசுரர் அனைவரும் நெருங்க முடியாமல் உலகமே அழியுந்தன்மைக்கேதுவாய்ப்பாற்கடலில் அமுதங் கடையுங்கால் கடையும் கயிறாகிய வாசுகியினால் உமிழ்ந்த ஆலகால விஷத்தை உகந்து அமுது செய்த நீலகண்டப் பிரானின் அடியாள் அல்லரோ? அதனால் யாரும் விரும்பாத பேய் வடிவத்தை விரும்பிப் பெற்றாரென்பது வியத்தற்குரியது.

அம்மையார் கைலைவெற்பின் பாங்கணைந்து காலினடை யினைத் தவிர்த்துப் பார்மேல் தலையினால் மலைமீது திருவி ரட்டை மணிமாலை என்னும் 20 பதிகத்தைப் பாடிக்கொண்டு வருவதை இமையவல்லியின் திருக்கண்ணோக்குப் பட்டு இறைவரை நோக்கி, "இவ்வென்பின்யாக்கை அன்பு என்னே?'' என்று வினவ, இறைவர், நம்மைப்பேணும் அம்மை காண் என்று அருளி அருகுவந்தணைந்தபோது "அம்மையே யென்னுஞ் செம்மையொருமொழி யுலகமெல்லாம் உய்யவே அருளிச் செய்தார்.' "தலை கீழாக நடக்க முடியுமா'' என்

ஒரு கேள்வி எழலாம். யோக சாதனையுள்ளார்கள் தலை கீழாக நடக்கின்றார்கள். கலிங்கத்துப்பரணியில் பேய்கள் தலை கீழாக நின்றாடியதை அறியலாம். அம்மையார் பேயுருவை வேண்டிப் பெற்றதோடு, திருவருளும் ஒருங்கே பெற்றுள்ளதால், எச்செயலும் செய்யுந்திறமுடையார் தலையினால் நடந்தாரென்பதில் சிறிதும் ஐயப்பாட்டிற்கு இடமே யில்லை.

இறைவர், "அம்மையே, வருக! என்றழைக்க, "அப்பா" என்று அடியுறப்பணித்து வீழ்ந்தெழுந்ததும், "நம்மால் வேண்டுவதென்" என, அம்மையார் "இறவாத இன்பம்" அன்பு, பிறவாமை, மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும் மறவாமை வேண்டும். நீ ஆடும்போது உன் அடியின் கீழ் நான் மகிழ்ந்து பாடிக்கொண்டிருக்க வேண்டும் என்றார்.

இறைவர் இவ்வரமனைத்துங் கொடுத்த இப்பயனைத் "தென்திசையில் என்றும் நீடுவாழ் பழனமூதூர் நிலவிய ஆலங்காட்டில் ஆடுமாநடமு நீ கண்டானந்தஞ் சேர்ந்தெப் போதும் பாடுவாய் நம்மை', எனப்பணித்தருள, செப்பரும் பெருமையின்பால் தென்திசைத் திரும்பித் திகழ் திருஆலங் காடாம் நற்பதி தலையினாலே நடந்து, புக்கடைந்து, அண்ட முற நிமிர்ந்தாடுகின்ற கோலங்காண்பொழுது "கொங்கை திரங்கி" என்ற 11 பாடல் பாடி, ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'அப்பன், அப்பன்' என்றே மூத்த திருப்பதிகம் பாடித் திருக்கூத்தினால் பெருங்காதல் எழுநதோங்க, "எட்டியிலவம் ஈகை' என எடுத்துக் கொட்ட முழவங்குழகனொடும், என 11-பாடலும் பாடி அடிசேர் முத்தியாய மணியம்பலக் கூத்து கந்தானின் திருவடிக்கீழ் என்றும் வீற்றிருக்கின்றார்.

"தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்ததும், முதலை யுண்ட பாலனை அழைத்ததும், என்பு பெண்ணுருவாக் கண்டதும், மறைக்கதவினைத திறந்ததும், பரமர் ஏடெழுதக் கோவை பாடியதும், தீந்தமிழ் மொழியிலன்றோ? இச்சிறப்பினதாய நந்தமிழகத்தே ஒருமையால் உலகை வென்று பெருமையால் தமககுத்தாமே ஒப்பாகிய 63 தனியடியார்கள், 9 தொகை யடியார்களையும் உள்ளடக்கிய பெரியார்களின் பத்திச் சிறப் பியல்புகளை உலகினர் அறிந்து உய்யவேண்டுமென்ற பெருங் கருணைப் பேரருட்பெருக்கால் இறைவரின் பிரதிபிமபமாம் அணுக்கத் தொண்டராய்க் கயிலையிலிருந்த ஆலால சுந்தரரை நந்தமிழகத்தில் சுமார் கி. பி. 8-ஆம் நூற்றுண்டில் அவதரிக்கச் செய்து, அவருக்கு நடந்த திருமணப் பந்தலில் ஆவணங்

காட்டி வழியடிமையை வற்புறுத்தித் தடுத்தாட்கொண்டு, பின்னர் அச்சுந்தரமூர்த்திகளைக் கொண்டே ஈர அன்பினராய் வீடும் வேண்டா விறலின் விளங்கிய அடியார்களைப் பாடிப் பணிவாய் என, சுந்தரனார், "இறைவரே, தேவரீர் திருவாக்கால் சிறப்பிக்கும் பேறுபெற்ற அடியார்களை அடியேன் எப்படிப் பாடுந்தகுதியுடையேன?" என்ன, திருவாரூர் தியாகேசர், அசரீரியாக, தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன் என்று ஓர் அரைக்கால் அடியெடுத்துக் கொடுக்க, மற்று முக்காலரைக்காலோடு ஒரு பாடலும் அப்படியே 11 பாடலால் திருத்தொண்டர் தொகையையும் பாடியருளினார்.

கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் திருமுறை கண்ட சோழப் பேரரசன் நம்பியாண்டார் நம்பி என்னும் அருட்பெரியார்பால் வந்தடைந்து, பொல்லாப்பிள்ளையார் திருவருளால் தேவாரந் திருமுறைகளைக் கண்டு உலகறியச்செய்ய வேண்ட, நாமுய்ய ஞானபொக்கிஷத்தைத் திறந்து அருளிய பெரியார் நாயன்மார்களை 100 பாடல்களால் திருத்தொண்டர் திரு அந்தாதி என அருளிச்செய்தார்,

பின்னர் கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் சைவமுந்தமிழும் தழைத்தினிதோங்க நம் தவப்பயனால் குன்றத்தூரில் அவதரித்து, சோழப் பேரரசில் முதலமைச்சராய் வீற்றிருந்து, புலமையும், பக்தியும் அருளும் நிறைந்த சிவானுபூதிச் செல்வராம் சேக்கிழார் பெருமான் சோழன் வேண்டுதலுக்கிரங்கி, தில்லையம்பலத்தலத்தடைந்து, உலகம் இயங்க, உயிர்கள் இயங்க, தாம் இயங்கிக்கொண்டே ஆன்மாக்களை ஈடேறச் செய்யும் பொன்னம்பலக் கூத்துகந்தானை "இறைவனே தேவரீரின் பிரதிபிம்பமாய், தோழராயுள்ள சுந்தரமூர்த்திப் பெருமானாரே அடியார் சிறப்பைக்கூற முடியாமல் தேவரீர் அடியெடுத்துக் கொடுத்துப் பாடச் செய்தருளினீர்கள். பின்னர் நம்பியாண்டார் நம்பி பெருமானுக்கு மூத்த பிள்ளையாரைக் கொண்டு உணர்த்தச் செய்து திருத்தொண்டர் திருவந்தாதி பாடச் செய்தருளினீர்கள். இப்போது சோழப்பேரரசன் இச்சிறப்பினராய அடியார்களின சரித்திரத்தை விரிவாக்க வேணவாக் கொண்டுள்ளான்.

இப்பெரும்பணிக்கு அடியேனை ஊக்குவிக்கின்றான். அடியேனால் இச்செயல் நடைபெறுமா? "கண்ணுதலாய் காட்டுவித்தால் யாரொருவர் காணாதார்? பாடுவித்தால் யாரொருவர் பாடாதார்? நீர் பாடுவித்தல்லவோ முன்பெரியார் இருவர் பாடியருளினர்? இதுபோல அடியேனுக்கு அருள்பாலிக்க

வேண்டும்'' எனப் பன்னுள் வேண்ட ஒரு நாள் பொன்னம் பலக்கூத்துகந்தார் ''உலகெலாம்'' என ஐந்தெழுத்தால் ஓர் அசரீரி அருள, அப்பெருமொழியையே முதலிலுல, இடையிலும், கடையிலுமாக அமைத்துத் திருத்தொண்டர் புராணமென்னும் பெரியபுராணத்தை 4286 பாடல்களாக 63 தனியடியார்களையும், 9 தொகையடியார்களையும், தொகுத்துப் பாடி முடித்தார்கள். திருத்தொண்டத் ''தொகை நூல்'' அருளியோர்–சுந்தரமூர்த்திகள். திருத்தொண்டர் திருஅந்தாதி ''வகை நூல்'' அருளியோர்–நம்பியாண்டார்–நம்பிகள் திருத்தொண்டர் புராணம் ''விரிநூல்'' அருளியோர்–சேக்கிழார் அடிகள். அம்மையாருக்குத் தாய் தந்தையார் இட்ட பெயர்–புனிதவதியார். அம்மையாரே வேண்டிப் பெற்றுக்கொண்ட பெயர் – பேயார். கயிலைக்கண்ணுதற் கடவுளால் அருளிய பெயர் – அம்மை. தொகை நூல் அருளிய சுந்தரமூர்த்திகள் அம்மையாரே விரும்பிப் பெற்றுக்கொண்ட ''பேயாய நற்கணத்தில் ஒன்றாய நான்'' என்றபடி ''பேயார்க்கு மடியேன்'' என்று வணங்கினர்.

வகைநூல் அருளிய நம்பியாண்டார் நம்பிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகளால் 72 அடியார்கள் திருப்பெயரைக் கூறி வணங்கியவர்களை ஒவ்வொரு அடியார்களின் ஊரும், பேரும், தொண்டும் குறித்து 100 பாடல்களால் திருத்தொண்டர் திருஅந்தாதி பாடியருளியதில் அம்மையாரை ''காரைக்காலின் மேய குலதனமே'' என்று வணங்கினர்.

விரிநூல் அருளிய சேக்கிழார், அம்மையார் சரிதத்தைக் காரைக்கால் அம்மையார் புராணம் என அரிய பெரியநுட்பங்கள் செறிந்த 66 பாடல்களால் அம்மையாருக்காக்கித் தாய் தந்தையார்களாலும், தம்மாலும் இறைவராலும் பெற்ற பெயர்களனைத்தையும் தொகுத்துப்போற்றி வணங்கினர்.

அம்மையார் கயிலைமலை ஏறுங்காட்சியை நம்பியாண்டார் நம்பிகள் ''நம்பன் திருமலை நான் மிதியேன் என்று தாளிரண்டும் உம்பர் மிசை'' எனவருளினர். தாளிரண்டும் உம்பர்மிசை என்றதால், வானுலகத்தில் தேவர்கள் வசிப்பதாகச் சாத்திரங்கள் புகல்கின்றன. அம்மையார் பாதங்களை ஆகாயத்தைப் பார்க்க மேலே தூக்கியருளித் தலையைக் கீழே ஊன்றியருளியதால், அம்மையார் திருவடிகளைத் தேவர்கள் மகுடமாகத் தலையில் தரித்ததாகக் கைப்போது மலர் தூவி காதலித்து வானோர்கள் முப்போதுந் தொழநின்ற முதல்வனே'' அம்மை

யென்றருளியதும், "பெரிது பெரிது புவனம் பெரிது" என்ற ஔவையின் அருள் மொழியில் "இறைவனோ தொண்டருள் ஒடுக்கம்; தொண்டர் தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே" என்றதால் அடியார்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் தானே தேவர்கள்? அடியாராகிய துருவாசரால் இந்திரன் சபிக்கப்படவில்லையா? திருத்தொண்டர் புராணத்தைத் துருவி ஆராய "தொட்டனைத்தூறு மணற்கேணி"யைப் போல ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விளக்க முண்டாகும். அதனாற்றான் "பெரிய புராணம்' எனப்பட்டது. 18 புராணங்களுக்கோ மற்றைய புராணங்களுக்கோ பெயரைச் சுட்டிப் புராணம் எனக் கூறவேண்டும். எந்தப் புராணத்திற்கும் பெரிய புராணம் எனப்பெயர் வந்திலது. எந்தத் தேவர்களுக்கும் மஹாதேவன் எனப் பெயரில்லை.

திருக்கயிலை மலைக்கு எந்த அடியாரும் பூத உடலோடு போய் இறைவனைத் தரி த்துத் திரும்பி இந்நாட்டிற்கு வந்ததாகச் சரித்திரமேயில்லை. இப்போதும் நாம் காணும் கயிலை மலைக்கு உள்ளீடாய் (அந்தர்கதமாய்) யோகியரும், ஞானியரும், சென்றுணர்ந்து அனுபவிக்கக் கூடியதான ஒரு திவ்விய க்ஷேத்திரம் உள்ளதாயும் அங்கு இறைவன் எப்போதும் உமையுடனும் பரிவாரங்களோடும் அனவரதத் தாண்டவம் புரிகின்றாரென்றும் ஞான நூல் கூறுகின்றது. இப்போது நம் மனக் கண்ணால் பார்க்கும் கயிலாய மலை குக் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறு குற்றத்தோடு வினையைப் பெருக்குவோரும் உடல் வலைப்பாலும், பொருட் சிறப்பாலும் போய்த் தரிசித்து வருகின்றார்கள். இப்பிறவியைப் புனிதமாக்கி மறுபிறவியில் படனடையும சிறப்புக கயிலைமலைக் கடவுளைக் காண ஞான நேயத்தால் போனவர்கள் திரும்பி வந்ததாகக் காணவில்லை. "மெய்கண்டான் பொருந்திடுவன் சிவத்திநெடும் போதான் பின்னை முன்னிறை நீர் சிறைமுரிய முடுகியோடி முன் னீர் சேர்ந்து அந்நீராய்ப் பின்னீங்கா முறை போல்" (சித்தியார்) திரும்பிவர ஆசைப்படார்கள். தமிழகம் தனிச்சிறப்படைந்து உய்யச் சான்றோரால் சிறப் படைந்த தொண்டை நாடு மேலும் சிறப்படைய அன்றோ சான்றாண்மை மிக்க அம்மையாரைத் திரு ஆலங்காட்டிற்கு அனுப்பியது?

(தொடரும்)

மதிப்புரை

“புள்ளிருக்கு வேளூரில் வள்ளலார்” என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது 2—7—1969 அன்று வைத்தீஸ்வரன் கோயில் கும்பாபிடேக நினைவு வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. வெளியிட்டவர் திருச்சி மாவட்டச் சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையத் தலைவர் அருள்திரு. ஊரன் அடிகள் ஆவர்.

இவ்வெளியீட்டில் வைத்தீஸ்வரன் கோயில் பற்றிய வரலாறு சுருக்கமாகக் காணப்பெறுகிறது. மேலும் திருவருட்பா இராமலிங்க சுவாமிகள் வைத்தீஸ்வரன் கோயிலிடத்துக் கொண்ட ஈடுபாடும் விளக்கப்பெற்றுள்ளது. மேலும் இத்தலம் பற்றி திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய தேவாரப் பதிகம் ஒன்றையும் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரப் பதிகங்கள் இரண்டையும் இராமலிங்க சுவாமிகள் அருளிய சிகாமணி மாலை 15 பாக்கள், பிரசாதப் பதிகம், வைத்தியநாதர் பதிகம் ஆகியவைகளையும் இந்நூல் பெற்றிருப்பது மிகவும் போற்றத்தக்கது. அன்பர்கள் இப்பாக்களைப் படித்து இன்புறலாம். விலை 50 காசுகள். அஞ்சல் மூலம்பெற விரும்புவோர் 60 காசுகள் பணவிடை மூலம் அனுப்ப வேண்டும். நூல் கிடைக்குமிடம்:—திரு. ஊரன் அடிகள், சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், சமயபுரம் அஞ்சல், திருச்சி மாவட்டம், என்பதாகும். யாவரும் இந்நன்னூலை வாங்கிப்படித்துப் பவரோக வைத்தியம் புரியும் பெருமானருளைப் பெற்று நீடுவாழ்வார்களாக. (அம்பை)

திருப்புகழ்த்திரட்டு என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இதனைத் தொகுத்தவர் சித்தாந்தம் ஆசிரியர் திரு. மு. அருணாசலம் அவர்கள் ஆவர்.

இத்திரட்டில் அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றப் பெற்ற சிறந்த 48 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. முருக பக்தர்கள் பாராயணத்துக்காக எப்பொழும் கையில் வைத்துக் கொள்ளத்தக்கது. விலை 25 காசுகள். தபாற் செலவுவேறு. வேண்டுவோர்:– தலைவர், காந்தி வித்தியாலயம். திருச்சிற்றம்பலம், பந்தணைநல்லூர் வழி, தஞ்சைமாவட்டம்—என்னும் முகவரிக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம், (அம்பை)

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர் தங்கள் புத்தாண்டுச் சந்தாத் தொகை ரூபாய் ஐந்தினையும் 31-12-69 க்குள் அனுப்பி வைக்க வேண்டுகின்றோம். வி. பி. பி. யில் ஜனவரி மாத இதழை அனுப்புவதாயின் 75 காசுகள் வீணாக அதிகம் செலுத்தவேண்டியிருக்கும். மணியாடர் மூலம் சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப் பெயர், 2. சந்தா எண் 3. தெளிவான முகவரி 4. மாவட்டம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழநாட்டில் உள்ள அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை அரசிவலார் இசைவு பெற்றுத் தவறாது அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கின்றோம். மலேயா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை திரு சிவநேசன் அவர்களிடம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கி கிறோம்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:-

செயலாளர்,

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கீழமாட வீதி, சென்னை-4.

நம் சமாஜ ஆயுள் உறுப்பினராகக் கீழ்க்காணும் அன்பர்கள் சேர்ந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1. திரு இளமுருகு அவர்கள், பி. எஸ்சி., பி. டி.,
4/114, சங்கர்ப் பெருவழி,
புன்செய்ப்புளியம்பட்டி அஞ்சல், கோபிவட்டம்,
கோவைமாவட்டம்.

2. திரு, M. R. சம்பந்தம் அவர்கள்,
C/o R. தாசன் ஸ்டுடியோ,
1/48, ரட்டன் பசார், சென்னை-3.

கார்த்திகைத் திங்கள் சிறப்பு நாள்கள்

9 (23-11-69) கார்த்திகை—கணம்புல்ல நாயனர் விழா
Do —கார்த்திகை விளக்கீட்டு விழா
18 (3-12-69) உத்தாம் —மெய்ப்பொருள் நாயனர் விழா
19 (4-12-69) அத்தம் — ஆனய நாயனர் விழா
25 (10-12-69) மூலம் — மூர்க்க நாயனர் விழா
26 (11-12-69) பூராடம் — சிறப்புலி நாயனர் விழா

பிறசெய்திகள்

நம் சமாஜ ஆயுள் உறுப்பினர் பந்தணைநல்லூர் பேரன்பர் திரு P. S. நாகலிங்கம் செட்டியார் அவர்களுக்கு 14-10-69 ல் நிகழ்ந்த 80 ஆம் ஆண்டு நிறைவு விழாவின் போது அன்பளிப்பாக ரூ. 10/-சமாஜத்துக்குச் சமயக் காணிக்கையாக அளித்துள்ளார்கள். இப்பெரியார் இன்னும் ஒரு நூற்றாண்டிருந்து சிவத்தொண்டாதிய நற்பணிகளைப் புரிந்து இன்புற்றிருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க அவன் இணையடிகளை வணங்கி வேண்டுகின்றோம்.

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் சார்பில் மெய்கண்டதேவ நாயனார் புரட்டாசி சுவாதித் திருநாள் 13-10-69 திங்களன்று பிள்ளையார் பாளையம் திருவாவடுதுறை மடாலயத்தில் சிறப்புற நிகழ்ந்தது. புலவர்மாமணி திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் "சிவஞான போதம் பொதுவதிகாரம்" என்பது பற்றி விரிவுரையாற்றினார்கள்.

கன்னியாகுமாரி மாவட்டம் இராஜாக்க மங்கலம், வினைத்த கதை முடித்த விநாயகர் ஆலயத்தில் திருமூலதேவ நாயனார் குருபூஜை விழா, நன்னெறி மன்றச்சார்பில், மன்றத் தலைவர், சிவத்திரு சி. வள்ளிநாயகம் பிள்ளை அவர்கள் தலைமையில் 25-10-69 அன்று சிறப்பாக நடைபெற்றது. சைவப் புலவர், வித்துவான், சி. குமரேசபிள்ளை அவர்கள் 'திருமந்திரம்' என்னும் பொருள்பற்றி ஓர் அரிய சொற்பொழிவாற்றினர். பஜனை, திருமுறை ஓதல், தியானம், அருச்சனை, தீபாராதனை முதலிய வழிபாடுகள் நடைபெற்றன.

இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் சார்பில் 31-10-69 வெள்ளிமாலை திரு வி. க. நினைவு நாள் கொண்டாடப் பெற்றது. முதுபெரும் புலவர் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் தலைமையில் திரு ஔவை நடராசன், டாக்டர் S. விசயலட்சுமியம்மையார், மறைத்திரு. எஸ். டான்பூசவரி முத்து ஆகியோர் திரு. வி. க. வின் சிறப்பியல்புகள் பற்றி விரிவுரையாற்றினர்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.